**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No.138 /2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/க/பெ. | : | துரைசாமி | கிராமம் | : | புளிச்சக்காடி |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 55 |

**குறுக்கு விசாரணை**

எனது தாத்தா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் சங்கர் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதி எனது தம்பியின் மகள் என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி தாவா சொத்தில் புல எண்.57/7 ஐ கிரயம் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதி தனது எதிர் வழக்குரையுடன் புல எண்.57/7 ஐ கிரயம் பெற்ற கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார் அதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. புல எண்.57/7 ன் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா பெயரில் உள்ளது. தாவா சொத்துக்களை நான் கிரயம் பெற்றேனா என்றால் இல்லை. அரசால் பட்டா வழங்கப்பட்டது. தாவா சொத்துக்கள் பாலுஅய்யர் என்பவரிடமிருந்து பெறப்பட்டது என்றால் சரிதான். பெறப்பட்டதாக காட்டும் பத்திரங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் எவ்வளவு தொகை கொடுத்து தாவா சொத்துக்களை பாலுஅய்யரிடமிருந்து வாங்கினேன் என்றால் ரூ.5500/- தொகை கொடுத்து சுமார் 40 வருடங்களுக்கு முன்பு வாங்கினேன். மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மகாதேவ அய்யரையும் அவரது மகன் கிருஷ்ணமூர்த்தி அய்யரையும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வைத்தியநாத அய்யரை தெரியுமா என்றால் தெரியும். வைத்தியநாத அய்யரின் தத்தெடுத்த மகன் தான் கிருஷ்ணமூர்த்தி அய்யர் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி அய்யர் 19.04.2021ல் பிரதிவாதிக்கு தாவா சொத்து 4ம் அயிட்ட புல எண்.57/7 ஐ கிரயம் செய்து கொடுத்தார் என்றால் அவ்வாறு ஏதும் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் தொகுப்பு வீடு ஒன்று எனது தாயார் குப்பம்மாளுக்கு அரசால் கட்டி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் புல எண்.56/65 ல் அரசால் ஒரு தொகுப்பு வீடு கட்டி கொடுக்கப்பட்டது. அந்த வீட்டிற்கு மின்

இணைப்பு உள்ளதா என்றால் இலவச மின்இணைப்பு உள்ளது. எனது தாயார் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது வீட்டிற்கும் எனது அம்மா வீட்டிற்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது தாயாரை இவ்வழக்கில் வழக்காடியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் எனது தாயாரை வழக்காடியாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. என் தம்பி சங்கரும் , பிரதிவாதியும், எனது தாயாரும் தம்பி இறக்கும் வரை ஒரே தொகுப்பு வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். தற்போது எனது தாயார் யாருடன் இருந்து வருகிறார் என்றால் என்னுடன் தற்போது இருந்து வருகிறார். தாயார் குடியிருந்த தொகுப்பு வீட்டை பழுதடைந்ததால் இடித்து விட்டேன். எனது தாயார் வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. பிரதிவாதியும் அவரது தாயாரும் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் அதே தெருவில் 5 வீடுகள் தள்ளி வசித்து வருகிறார். பிரதிவாதி எனது குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பாலுஅய்யருக்கும் மேற்டி தாவா சொத்துகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பாலுஅய்யர் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் சேங்காலிபுரத்தில் வசித்து வருகிறார். மேற்படி சாட்சி தற்போது பாலுஅய்யர் இறந்துவிட்டதாக மாற்றி சொல்கிறார். எனது வழக்குரையில் பாலுஅய்யருக்கு தெரிந்தே வழக்கு சொத்தை அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை நம்ப வைப்பதற்காக பாலுஅய்யர் என்பவரை கற்பனையாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.26 10:41:15 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.